பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம் நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D M K

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆடி 4உ (20—7—67) வியாழன் ★ வெளியூர்: ஆடி 5உ (21—7—67) வெள்ளி [இதழ்: 31

## கேரளத்தில் 'கேரோ'

திருவனந்தபுரம், ஜூலை 19—

நேற்று முதல் திருவாங்கூர் 'டிட்டோனியம் பிராடக்ட்ஸ் லிமிடெட்' தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் தொடர்ந்து 'கேரோ' செய்து வருவதால் தொழிற்சாலையின் நிர்வாகிகள் கதவடைப்புச் செய்துள்ளனர்.

அரசுத் துறையில் இயங்கும் இந்த நிறுவனம், டிட்டோனியம் டையாக்சைட் உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது.

தென் கிழக்கு ஆசியா முழுவதிலும் இத்தகைய நிறுவனம் வேறு கிடையாது.

# எழுச்சி நாள்—டில்லியின் எதிரொலி!

## திட்டம் கைவிடப்படவில்லையாம்—

எனினும்

## இன்னும் முடிவெடுக்கவில்லையாம்

### மீண்டும் ஆய்வு நடத்தப் புதிய குழு நியமிக்கப்படுமாம்

### போக்குவரத்துத் துறை அமைச்சர் வி. கே. ஆர். வி. ராவ் அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 19—

சேலம்—தூத்துக்குடித் திட்டங்களை வற்புறுத்தும் வகையில் ஜூலை 23-ம் நாள் எழுச்சி நாள் கொண்டாடத் தமிழகத்தில் காங்கிரசு தவிர்த்த மற்ற அனைத்துக் கட்சிகளும் முடிவு செய்திருப்பது, டில்லியைக் கலங்கவைத்திருக்கிறது!

டில்லி அமைச்சர்கள் ஆளுக்கொரு விதமாகவும், நாளுக்கொரு விதமாகவும் பேச ஆரம்பித்திருக்கின்றனர்!

இந்தத் திங்கள் 4-ம் நாள் சென்னைக்கு வந்திருந்த போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. வி.கே.ஆர்.வி. ராவ், 'தூத்துக்குடித் திட்டம் கைவிடப்படவில்லை—கைவிடப்பட மாட்டாது' என்றெல்லாம் கூறினார்.

துணைத் தலைமையமைச்சரான மொரார்ஜியோ இரண்டு நாட்களுக்கு முன் தூத்துக்குடித் திட்டம் பற்றிக் குறிப்பிடுகையில், 'இத்திட்டத்துக்கு இன்னும் முறைப்படியான அனுமதியே அளிக்கப்படவில்லை' என்று ஒரு புதிரைப் போட்டார்!

இப்போது திரு. வி.கே.ஆர்.வி. ராவ் வேறு விதமாக நிலைமை விளக்கம் தந்திருக்கிறார்.

'தூத்துக்குடித் திட்டம் குறித்து மத்திய அரசு சார்பில் ஒருவரும், மாநில அரசுச் சார்பில் ஒருவரும் அடங்கிய குழுவொன்று போக்குவரத்து வாய்ப்பு வசதிகளைக் கண்டறியும் வகையில் முற்றிலும் புதிய ஆய்வு ஒன்றை மேற்கொள்ளும்' என்று அவர் மக்களவையில் அறிவித்துள்ளார்.

தமிழகத்தில் 'எழுச்சி நாள்' கொண்டாட இருப்பது குறித்துச் செய்தியாளர்களிடம் அவர் கருத்தறிவிக்கையில், எழுச்சி நாள் கொண்டாடுவதைத் தாம் விரும்பவில்லை என்றும், அப்படிக் கொண்டாடுவது தமது கரங்களை வலிவிழக்கச் செய்யும் என்றும் கூறியிருக்கிறார்.

தூத்துக்குடித் திட்டம் தொடர்பாக மத்திய—மாநில அரசுகள் கூட்டாக, இருவர் அடங்கிய குழுவை நியமித்து, போக்குவரத்து வாய்ப்பு வசதிகள் பற்றியும், பொருளாதார வள வாய்ப்புக் குறித்தும் முற்றிலும் புதிய ஆய்வு ஒன்றை மேற்கொள்ள இருப்பதாக மக்களவையில் அறிவித்த திரு. வி. கே. ஆர். வி. ராவ், மேலும் கூறியதாவது:—

"இந்தக் குழு தனது ஆய்வை முடித்து அறிக்கை கொடுத்த பிறகுதான், 'திட்டம் எந்த அளவில் இருக்கும்' என்பதும், மற்ற விவரங்களும் இறுதியாக முடிவு செய்யப்படும்.

இந்த விவகாரம் எனது பரிசீலனைக்கும், தமிழக முதலமைச்சர் பரிசீலனைக்கும் வரும்.

இதற்கிடையில், இத்திட்டம் தொடர்பான வேலைகள் தொடர்ந்து நடைபெறும் பொருட்டு நடப்பு நிதியாண்டில் ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 50 இலட்சம் ரூ. 1 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

நான் இத்திங்கள் 4-ஆம் நாள் தமிழக முதலமைச்சரைச் சந்தித்தபோது, போக்குவரத்து வாய்ப்புக்களின் கூறுகளை மீண்டும் ஆராயும் ஏற்பாட்டுக்கு அவர் ஒப்புக்கொண்டுள்ளார்.

இத்திட்டம் கைவிடப்பட்டுவிடவில்லை. இதற்காகப் போராட்டம் நடத்த முனையும் கட்சிகள், 'போராட்டத்தைக் கைவிட வேண்டும்' என்று கேட்டுக் கொள்கிறேன்."

செய்தியாளர்களிடம் திரு. ராவ் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தூத்துக்குடித் திட்டத்தைச் செயல்படுத்தக்கூடிய வகையில் தற்போது பண வசதி இல்லை என்றாலும், செயல்படுத்தக் கூடிய அளவுக்குப் பண வசதி ஏற்படும் நேரம் வரும் என்று நம்புகிறேன்.

இத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் நானும் ஆர்வம் கொண்டிருக்கிறேன். இத்திட்டத்துக்கு மாற்றுத் திட்டம் எதையும் எனது அமைச்சுத் துறை ஆலோசிக்கவில்லை.

இத்திட்டம் பற்றிய இறுதியான முடிவு, அக்டோபர் மாதவாக்கில்தான் மேற்கொள்ளப்படும்.

திட்டத்தை மாநில அரசுடன் கூட்டாக ஆராய எனது அமைச்சுத்துறைச் சார்பில் ஓர் அதிகாரியை இன்னும் நான்கு நாட்களுக்குள் நியமித்துவிடுவேன்; நானும், தமிழக முதலமைச்சருடன் சேர்ந்து செப்டம்பர் மாதவாக்கில் தூத்துக்குடித் துறைமுகத்தைப் பார்வையிட இருக்கிறேன். அதன் பிறகு அதிகாரபூர்வமான அறிக்கை தயாராகிவிடும்."

## ம. பி. அமைச்சரவைக்கு ஆபத்து

### காங்கிரசுத் தலைமைக்குப் பேரதிர்ச்சி!

போபால், ஜூலை 19—

மத்தியப் பிரதேசத்தில் உள்ள காங்கிரசு அமைச்சரவைக்குப் பேராபத்துச் சூழ்ந்துள்ளது. சட்டமன்றத்தில் உள்ள ஆளுங்கட்சி உறுப்பினர்களில் 36 பேர், எதிர்க்கட்சியான சம்யுக்த விதயாக் தளத்தில் சேர முடிவுசெய்துவிட்டதாக இன்று சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது.

இதன்விளைவாக ஆளுங்கட்சி பெரும்பான்மை இழக்கும்; எதிர்க் கட்சி ஆளுங்கட்சியாகக் கூடிய வலிமை ஏற்பட்டுவிடும்.

இன்று சட்டமன்றக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்ட பின், முதலமைச்சர் திரு. டி. பி மிஸ்ரா செய்தியாளர்களிடம் பேசுகையில், கட்சி மாறியவர்களின் நிலை உறுதிப்படுத்தப்பட்டுவிட்டால், பிறகு சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு மறு தேர்தல் நடத்தும்படி கவர்னரிடம் தாம் சொல்லப் போவதாகக் கூறினார்.

### புதுடில்லியில் எதிரொலி

போபால் செய்தி கேட்டுக் காங்கிரசுத் தலைவர் காமராசரும், தலைமையமைச்சர் இந்திரா காந்தியும், ம. பி. முதலமைச்சருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு நிலைமையை விவாதித்தனர்.

## காமராசருக்குப் பேரிடி!

### 'முடுக்கிவிட'ப் புறப்பட்டவருக்கு ஏற்பட்ட நிலை

சென்னையில் காங்கிரசு பிரசாரத்தை 'முடுக்கி'விடுவதற்காக, அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் காமராசர் இன்று (20—7—67) சென்னை வருவதாகப் பத்திரிகைகளில் முக்கியத்துவம் கொடுத்து அறிவிக்கப்பட்டிருந்ததல்லவா?

தமிழகத்தில் காங்கிரசை 'முடுக்கி'விட முனையும் அதே நேரத்தில் மத்தியப் பிரதேசத்தில் காங்கிரசுக் கட்சியின் நிலை படுமோசமாகிவிட்ட செய்தி காமராசருக்கு எட்டியதால், இப்போது சென்னைக்கு வரும் பயணத்தை ஒத்திவைத்துவிட்டு, போபால் நிலைமையைச் சரிசெய்வதில் ஈடுபட்டிருக்கிறாராம்!

காமராசருக்குப் பேரிடியைத் தந்திருக்கின்றனவாம்—போபாலிலிருந்து வரும் செய்திகள்! பாவம், காமராசர்!

## மேயர் குழு டில்லி திரும்பியது

### சனிக்கிழமையன்று சென்னை வருகை

புதுடில்லி, ஜூலை 20—

சோவியத் ரஷ்யா முதலான மேலைநாடுகளுக்குச்சென்றிருந்த சென்னை மேயர் உள்ளிட்ட மாநகராட்சி மன்றக் குழுவினர் புதுடில்லிக்கு வந்து சேர்ந்துவிட்டனர்.

இன்று மாலை கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ்மூலம் அவர்கள் இங்கிருந்து புறப்பட்டு, 22—7—67 சனிக்கிழமை மாலை 5-30 மணியளவில் சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தில் வந்திறங்குவார்கள்.

சென்னையில் ஏற்பட்ட தொடர்ந்த தீ விபத்துக்கள் பற்றிய செய்தி கிடைத்ததால், இவர்கள் தங்கள் சுற்றுப்பயணத்தை இத்துடன் முடித்துக்கொண்டு சென்னை திரும்புகின்றனர்.

ஏற்கனவே திட்டமிட்டபடி இவர்கள் ஆகஸ்டு 5-ம் நாள்தான் சென்னை வந்து சேருவதாக இருந்தனர்.

இந்தக் குழுவில் மேயர் இரா. சம்பந்தம், மாநகராட்சி ஆளுங்கட்சித் தலைவர் வி. முனுசாமி, மத்தியக் குழுத் தலைவர் சா. கணேசன், முன்னாள் மேயர் எஸ். கிருஷ்ணமூர்த்தி, முஸ்லிம் லீக் கட்சியைச் சேர்ந்த காஜா மொய்தீன், காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த எஸ். ஜி. விநாயகமூர்த்தி, குப்புசாமி ஆகியோர் உள்ளனர்.

## மாற்றுக் கட்சி ஆட்சியை கவிழ்ப்பதற்குச் சதி!

### திட்டம் வகுக்கக் காங்கிரசு உச்சக்கட்ட மாநாடாம்!

பாட்னா, ஜூலை 19—

பீகாரில் உள்ள காங்கிரசல்லாத ஆட்சியை ஒழித்துக்கட்ட, பீகார் காங்கிரசுக் கட்சியின் பெருந் தலைவர்களெல்லாம் கூடிச் சதித் திட்டம் வகுக்கப்போவதாகத் தெரிகிறது.

இதற்கெனப் பெருந் தலைவர்கள் அடங்கிய 'உச்சக் கட்ட' மாநாடு ஒன்றையும் அவர்கள் நடத்த இருக்கிறார்களாம்.

கடந்த மார்ச்சுத் திங்களில் பீகார் மாநிலத்தின் புதிய அமைச்சரவை பொறுப்பேற்றதிலிருந்து ஆட்சியின் நடவடிக்கைகளைக் கணக்கெடுத்துப் பார்த்ததில், இனியும்தொடர்ந்து இந்த ஆட்சியே பதவியில் நீடிக்க அனுமதித்தால், பொது மக்களின் வாழ்வே குலையும் என்பதுடன், மாநிலத்தின் வளர்ச்சியும் பாதிக்கும் என்ற முடிவுக்குக் காங்கிரசார் வந்துள்ளனராம்.

## மூன்றே ஆண்டுகளில் ஏறிய விலைகள்!

### நேரு மறைவுக்குப்பின் வேகம் அதிகரிப்பு

புதுடில்லி, ஜூலை 16—

"1964-ம் ஆண்டில், நேரு இறக்கும்போது பண்டங்களின் மொத்த விலை குறியீட்டு எண் 127 புள்ளியாக இருந்தது. ஆனால், இப்போது அது 212 ஆக உயர்ந்துவிட்டது.

"1950-ம் ஆண்டிலிருந்து 1964ம் ஆண்டுவரை—14 ஆண்டுகளில் 27 புள்ளிகளே உயர்ந்திருந்தன; கடந்த மூன்று ஆண்டுகளில் 85 புள்ளிகள் உயர்ந்துவிட்டன!"

என்று, மத்திய தொழிலாளர் நலத் துறை துணை அமைச்சர் எல். என். மிஸ்ரா நாடாளுமன்றத்தில் கூறினார்.

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ.

திருவள்ளுவராண்டு 1998 ஆடி 4 (20-7-67) வியாழன்

# 'தமிழ்நாடு' வாழ்க!

**"இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இம்மாநிலத்தைக் குறிப்பிடும் பெயர் 'தமிழ்நாடு' என மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்று இப்பேரவை உறுதியாகக் கருதுவதுடன், இதுகுறித்து அரசியலமைப்புச் சட்டத்தில் தேவையான திருத்தங்கள் அமையும் வண்ணம் மாநில அரசு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேணடுமென்றும் இப்பேரவை பரிந்துரைக்கிறது."**

முதலமைச்சர் அண்ணா அவர்கள், 'தமிழ்நாடு' என் முழங்க—அரசியல் கட்சிப் பாகுபாட்டை ஒதுக்கிவைத்துவிட்டு உறுப்பினர்கள் அனைவரும், 'வாழ்க' என முழங்க—தலைப்பில் குறித்திருக்கின்ற தீர்மானம் தமிழகச் சட்டப் பேரவையில் ஒருமனதாக நிறைவேறி இருக்கிறது. இதன்விளைவாக, தமிழ் மொழியே தலைமொழியாக வழங்கப்பட்டு வருவதும், அச்செம்மொழியினைத் தாய் மொழியாகக்கொண்ட தமிழ் மக்களே பெருந்தொகையினராக இருந்து வருவதுமான தமிழகம், இதுநாள்வரை இருந்துவந்த செயற்கைப் பெயரை இழந்து, இயற்கைப் பெயரான 'தமிழ்நாடு' என்ற நற்பெயரை ஏற்றுக்கொள்ளுகிறது.

இத்துணைக்கண்டம் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கத்திற்குள்ளான நாள்தொட்டு, அந்த அந்நிய ஆதிக்கம் அகற்றப்பட்டுச் சரியாக இருபது ஆண்டுக்காலம் உருண்டோடிவிட்ட பின்னரும், இன்றுவரை, தமிழ் வழங்கும் இத்தரணியை, அதற்குரிய 'தமிழ்நாடு' என்ற இயற்கைப் பெயரால் அழைக்கமுடியாத அவலட்சண நிலை நீடித்துவந்திருக்கிறது. அரசியல் சுதந்தரம் கிடைத்ததற்குப் பின்னரும்கூட, தமிழ் மக்களின் உறைவிடத்திற்குத் 'தமிழ்நாடு' என்று பெயர் சூட்டவும், 'தமிழ்நாடு' என அகமகிழ அழைத்திடவும் இயலாத நிலை, இன்றுவரை நீடித்திருந்தது வருந்தத்தக்கது. இவ்வாறு நீடித்திருந்த வருந்தத்தக்க நிலையை, இன்றைய கழக ஆட்சி, மாற்றி அமைத்துவிட்டிருக்கிறது.

"இந்தியாவின் வரலாறு கங்கைக்கரையில் எழுதப்படுவதல்ல; காவிரிக் கரையிலும் தாமிரவர்ணிக் கரையிலும் எழுதப்படவேண்டியதாகும்" என, வரலாற்று ஆசிரியர் டி. ஆர். சேஷயங்கார் அவர்கள் குறிப்பிட்டிருந்த தமிழகத்திற்கு, 'தமிழ்நாடு' என இன்றுவரை பெயரிடப்படாமலிருந்தது வேதனை தரும் செய்தியாகும்; அவ்வேதனை, இன்று துடைக்கப்படுகிறது,

**இந்த நாள், இத்துணைக்கண்ட வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய சிறந்த நாளாகும்.**

தமிழ் மொழி வழங்கும் இப்பகுதியை, 'சென்னை மாநிலம்' என அழைக்கப்படுவதைக் கைவிட்டுவிட்டு, 'தமிழ்நாடு' என்று பெயரிட்டு அழைக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை, கடந்த பதினைந்தாண்டுக் காலமாக முன்னேற்றக் கழகம் வற்புறுத்திவந்திருக்கிறது. கழக மாநாடுகள் ஒவ்வொன்றிலும், இப்பெயர் மாற்றக் கோரிக்கை, தீர்மான உருவம் பெற்றிருக்கிறது.

இத் 'தமிழ்நாடு' என்ற பெயர் மாற்றம் கோரி காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த முதியவர் சங்கரலிங்கனர், உண்ணுநோன்பிருந்து தம் அரிய உயிரையே காணிக்கையாகச் செலுத்தினர். அதற்குப் பின்னரும்கூட, ஏற்கனவே தமிழக ஆட்சிப் பொறுப்பிலிருந்தவர்கள், 'தமிழ்நாடு' என இந்த மண்ணுக்குப் பெயரிட்டு அழைத்திடுவதை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை.

அரசியல் காரணத்தைக் கருத்தில் கொண்டு, "ஆங்கில மொழியில், 'சென்னை' என்றும், தமிழ் மொழியில் 'தமிழ்நாடு' என்றும் இம்மாநிலத்தை அழைத்துக்கொள்ளலாம்" என்ற கருத்தைக் கூறினர். இதையும், முன்பிருந்தவர்கள், செயல்படுத்தினரில்லை. கருத்தளவில் கூறப்பட்டது, கருத்தளவிலே நின்றுவிட்டதே அல்லாது, செயலுருவம் பெறவில்லை; 'வெளியிட்டுள்ள கருத்துக்குச் செயலுருவம் தரவேண்டும்' என்ற கவலையும் அக்கறையும், அவர்களுக்கு இல்லவுமில்லை.

தமிழ் மக்களாகிய நாம் வாழ்ந்துவரக்கூடிய இந்த நிலப் பகுதி, இனித் 'தமிழ்நாடு' எனப் பெயர் பெறுகிறது. இதுவே, சட்டப் பேரவை நிறைவேற்றி இருக்கக்கூடிய தீர்மானத்தின் கருப்பொருள்.

தமிழகச் சட்டப் பேரவையில், அனைத்து அரசியல் கட்சிகளின் ஒப்புதலுடனும் நிறைவேறியிருக்கின்ற இத்தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு, இதுவரையில், 'சென்னை மாநிலம்' என வழங்கிவரப்பட்டிருக்கின்ற இத்தமிழ் நிலப்பரப்பை, 'தமிழ் நாடு' என அழைக்கத்தக்க வகையில் அரசியல் சட்டத்தை, இந்திய அரசு உடனடியாகத் திருத்தியாக வேண்டும். பேரவை நிறைவேற்றியுள்ள தீர்மானத்தின் ஒரு பகுதி, அதற்கான பரிந்துரையாகும்.

'தமிழ் நாடு' என்ற இப்பெயர் மாற்றத்தை ஏற்றுக்கொண்டு, அதற்கேற்ற வகையில் அரசியல் சட்டத்தைத் திருத்தி அமைப்பதில், இந்திய அரசுக்கு எந்தவித இழப்புமில்லை. எனவே, இதற்குரிய ஏற்பாட்டினை, ஒரு திருத்தம் மூலம் அரசியல் சட்டத்தில் செய்திடுவதற்கு, இந்திய அரசு தயக்கம் காட்டாது என்றே உறுதியாக நம்புகிறோம். இதே நம்பிக்கையை, தமிழக முதலமைச்சர், பேரவையில் வெளியிட்டிருக்கின்றார்.

'தமிழ் நாடு' என்ற பெயர் மாற்றம் சிறிய விஷயம் என்றாலும், பொருள் நிரம்பிய ஒன்றாகும். பொருள் நிரம்பிய இப்பெயர் மாற்றத்தைச் செய்கின்ற அரிய வாய்ப்பு, அறிஞர் அண்ணா அவர்களை முதலமைச்சராகக் கொண்டுள்ள கழக ஆட்சிக்குக் கிடைத்திருப்பது, கிடைத்தற்கரிய பெரும் பேறாகும். கழக வரலாற்றில் இத் திருப்பணி, சிறப்பான இடத்தைப் பெறுகிறது.

'தமிழ் நாடு' என இத்தமிழ் மக்களுக்கு முதல் முதலாகப் பெயரிட்டு அழைத்திருக்கின்ற சிறப்பும் புகழும், ஆட்சியின் வாயிலாக முன்னேற்றக் கழகத்துக்குக் கிடைத்திருக்கிறது என்றாலும், முதலமைச்சர் அவர்கள் பேரவையில் அறிவித்திருப்பது போல்,

**இது, தமிழுக்கு வெற்றி; தமிழருக்கு வெற்றி; தமிழ் வரலாற்றுக்கு வெற்றி; தமிழ் நாட்டுக்கு வெற்றி!**

ஏற்கனவே இருந்த காங்கிரசு ஆட்சியினர், 'தமிழ்நாடு' என்ற பெயரை ஏற்றுக்கொண்டிருக்கும் பட்சத்தில், 'தமிழ்நாடு' எனப் பெயரிடுவதற்கான வாய்ப்பு இன்றைய கழக ஆட்சிக்குக் கிடைத்திருக்கவே இருக்காது. அன்று தாங்கள் செய்யாது விடுத்ததின் காரணமாக, அவ்வாய்ப்பினை இப்பொழுது கழகம் பெற்றமைக்காகவும், இன்றைய கழக ஆட்சி மேற்கொண்டமைக்கு முழு ஆதரவு காட்டியுள்ளமைக்காகவும், காங்கிரசுக் கட்சியினரை நாம் மனமாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

'தமிழ்நாடு வாழ்க' என்று, அனைத்து அரசியல் கட்சிகளும் சட்டப் பேரவையில் இதயபூர்வமாக முழங்கிய முழக்கம் இனித் தமிழகத்தின் எட்டுத் திசைகளிலும் எதிரொலிக்கும்! தமிழ்நாடு வாழ்க!

—கா. க.

# இரும்பும் ஈயமும்!

**"தொழில் தேக்கமுற்ற நிலையில்—இரும்புக்குக் கிராக்கி குறைந்திருக்கும் நேரத்தில், இரும்பு - உருக்காலை கோரி, 'எழுச்சி—கிளர்ச்சி' என்றெல்லாம் பேசுவது, நாட்டு நலனை எந்த அளவுக்குப் பாதிக்கும் என்பதனை நாட்டுப் பற்றுள்ள அனைவரும் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளார்கள்."**

'சாக்கடை ஓரத்துச் சகதி' என்று—கொச்சையாகத் தமிழ்மக்கள் பெயர் சூட்டியுள்ள நாளேடு ஒன்று, இப்படித் 'தலையங்கம்' எழுதித் தன் தலைச் சரக்கை விளம்பரப்படுத்தியிருக்கிறது.

அதே இதழில் வேறொரு பக்கத்தில் வெளியாகியிருக்கும் செய்தியையும் கேளுங்கள் :—

**"பிலாய் உருக்கு ஆலையின் உலோகக் கம்பித் தயாரிப்புப் பிரிவை, சூலை 22-ஆம் தேதி பிரதம மந்திரி இந்திரா காந்தி முறைப்படி இயக்கி வைப்பார். பிலாயின் விஸ்தரிப்புத் திட்டம் நிறைவு பெறுவதை இந்த நிகழ்ச்சி குறிக்கும். இதை அமைப்பதற்கு 8½ கோடி ரூபாய் செலவாயிற்று."**

'தொழில் தேக்கமுற்ற நிலை'—'இரும்புக்குக் கிராக்கி குறைந்திருக்கும் நேரம்'—என்றெல்லாம், சேலம் உருக்காலை பற்றி சிறுபிள்ளைத்தனமாகக் காங்கிரசுக்காரர்கள் விவாதித்துக் கொண்டிருக்கும்போது, பிலாய் உருக்காலை விஸ்தரிப்பு எதற்காகவோ? அதற்கு மட்டும் 8½ கோடி ரூபாய் செலவிடுவானேன்?

சேலம்—தூத்துக்குடித் திட்டங்களுக்காக நெடுநாள் காத்திருந்து—எதிர்நோக்கி ஏங்கியிருந்து, 'எதுவும் நடக்காமற் போகுமோ' என்கிற ஐய உணர்வின் காரணமாக முழுத் தமிழகமும் முனைந்து எழுந்து தனது இதயக் குமுறலை வெளியிடத் துணிந்த சூலை 23-க்கு முதல் நாள் — சூலை 22-ல் — பிலாய் உருக்காலையின் **விஸ்தரிப்பை** தலைமையமைச்சர் இந்திரா காந்தி துவக்கிவைக்கிறார்.

சேலம் திட்டத்தைச் செயல்படுத்தக்கோரி தமிழகம் விடுக்கும் வேண்டுகோளை, 'வேண்டாத செயல்; தீண்டத்தகாத பிரச்சினை' என்று காங்கிரசுக்காரர்கள் சொல்லிக் கொண்டிருப்பதையும், **விஸ்தரிக்கப்பட்ட** பிலாய் உருக்காலையின் அமைப்பைத் தலைமையமைச்சர் இந்திரா காந்தி துவக்கிவைப்பதையும் நாமல்ல—இந்தத் தமிழகமே சீர்தூக்கிப் பார்த்துத் தீர்ப்பு வழங்கட்டும்!

கல்லூரித் தேர்வில் பேரன் வெற்றி பெற்ற குதூகலத்தில் ஆழ்ந்திருக்கும் முதலாளியிடம், பிள்ளை செத்துப் போனதைச் சொல்லி ஈமச் சடங்கிற்குக் காசு கேட்கத் துணியாத பரிதாபகரமான ஏழைத் தொழிலாளியைப்போல், பிலாய் உருக்காலையின் **விஸ்தரிப்பை** சூலை 22-ல் துவக்குகின்ற குதூகலத்தில் ஆழ்ந்திருப்போரிடம், மறுநாள் (சூலை 23-ல்) நாம், 'சேலம் உருக்காலை வேண்டும்' எனக் கேட்கும் துணிவினைப் பெறக் கூடாது என்பது, இங்குள்ள காங்கிரசுத் தோழர்களின் விருப்பம் போலும்! ஆனல், அவர்களுக்குள்ள விருப்பு—வெறுப்புகளை இந்தத் தமிழகம் ஒரு பொருட்டாக மதிக்கப் போவதில்லை!

தங்களுக்கு எவை தேவை என்பதைத் தவிர, மக்களுக்கு எவை வேண்டும் என்பதில் காங்கிரசுக் கட்சியினர் என்றைக்குமே கவலைப்பட்டதில்லை! ஆகவே, மக்களும் அவர்களுக்காகக் கவலைப் படுவதை வீண் வேலை என்று முடிவு செய்து, நெடுநாட்கள் ஆகிவிட்டன!

'மத்தியக் கிழக்கில் இஸ்ரேல் நாடுதான் ஆக்கிரமித்தது என்பதை நிலைநாட்டுவது தான், இன்று, காங்கிரசுக்காரர்களுக்குள்ள முக்கியத் தேவை!

ஆனல் நாமோ, நமது 'நாட்டு எல்லைகளை ஆக்கிரமித்துள்ள போர் வெறியர்களை முறியடிக்க, நாட்டின் ஒவ்வொரு பகுதியும் தொழிற் துறையில்—பொருளாதாரச் செழிப்பில் முன்னேற வேண்டும்' என்று சொல்லுகிறோம்.

'மத்தியக் கிழக்கில் யார் ஆக்கிரமிப்பாளர்' என்ற முடிவினைத் தெரிந்துகொண்டு காங்கிரசுக்காரர்கள்—சோம்பல் முறித்து விழித்துக்கொண்டு பார்க்கும் நேரத்தில்—நம்மை ஆக்கிரமித்துள்ள வெறியர்களை நாம் விரட்டியடிப்போம்!

மத்தியக் கிழக்கின் அரசியலைப் போலவே — அதில் ஆழ்ந்து கிடக்கும் காங்கிரசுக் கட்சியினர் கண்ணேட்டமும், பல நூற்றண்டுகளுக்குப் பின்தங்கியிருக்கிறது!

இல்லையானல், இரும்பு உருக்கு ஆலை துவக்குவதற்கும், 'இரும்புக்குக் கிராக்கி குறைந்திருப்பதற்கும்' தொடர்புப்படுத்தி அவர்கள் பேசுவார்களா?

பிலாயும் ரூர்கேலாவும் நிர்மாணிக்கப்பட்ட மறு நாளிலேயே கோடிக்கணக்கில் பொருளைக் கொண்டுவந்து குவித்துவிட்டனவா?

நிர்மாணித்துப் பல ஆண்டுகள் ஆகியும், இந்த உருக்காலைகளின் இலாபம் என்ன என்பது அனைவருக்கும் தெரிந்தது தானே! இரும்பாலையும் நீர் அணைகளும், துறைமுகத் திட்டமும், 'அடுத்த நாள் வருமானத்தைக் கணக்கிட்டுச் செய்யப்படுபவை' என்பது காங்கிரசுக்காரர்கள் புது வகையான வாதம் என்றால், இதுவரை கோடிக்கணக்கில் பணத்தைப் போட்டுள்ள திட்டங்களின் நிகர இலாபம்—வளர்ச்சி என்ன என்பதையும் அவர்கள் கணக்குக் காட்டுவதற்கும் தயாராகட்டும்!

'இரும்புக்குக் கிராக்கி இல்லை; ஆகவே, சேலம் இரும்பாலைக்கு அவசியம் இல்லை' எனும் பொருள்பட, விஷமத்தனமாக எழுதியிருப்பதை நினைக்கும் யாருக்கும் நெஞ்சு வெடிக்காமல் இருக்காது!

தமிழகத்தில் இரும்புக்கான 'பெர்மிட்'—'கோட்டா'க்களைப் பயன்படுத்தித் தீய வழியில் பொருள் சேர்த்த காங்கிரசுக்காரர்கட்கு வேண்டுமானல், இரும்பு, இப்போதைக்குக் கரும்பைவிட அதிக இலாபம் தராததாக இருக்கலாம்; ஆனல், 'இரும்பு தேவையில்லை' என்று ஆகிவிடவில்லை.

உருக்காலைத் தேவைகள் பற்றி அந்தந்த மாநிலங்கள் கொண்டுள்ள ஆவல் உணர்வைக் கேலி செய்யும் நோக்கத்திலோ அல்லது 'இந்தியாவின் நிதி நிலைமையைக் கண்காணித்து அவ்வளவு செட்டாக—கருராகச் செலவிடுகிறார்' என்ற விளம்பரம் கிடைக்க வேண்டுமென்பதற்காகவோ, மொரார்ஜி அவர்கள், ஆந்திரத்தில், விதண்டாவாதமான ஒரு பேச்சைப் பேசியிருக்கிறார்!

தலைமையமைச்சர் தேர்தலில், இந்திரா காந்தி அவர்களை ஆதரித்த தென் மாநிலங்களிடம் மட்டுமே மொரார்ஜி, இத்தகைய கண்டிப்பும் கருரும் காட்டுகிறார் என்பது வெகு விரைவில் தெரிந்துவிடும் என்றாலும், சேலம்—தூத்துக்குடித் திட்டங்கள் குறித்து மத்திய அரசின் திட்டமான முடிவு என்ன என்பது, அதைவிட விரைவாகத் தெரியவேண்டும்!

தலைமையமைச்சர் இந்திராகாந்தி அவர்கள், சேலம்—தூத்துக்குடித் திட்டங்களின் அவசிய—அவசரத்தை மனப்பூர்வமாக உணர்ந்து—சம்பந்தப்பட்ட துறைக்குப் பொறுப்பான மத்திய அமைச்சர் பலமாகச் செய்துள்ள சிபாரிசுக்குப் பிறகு—நிதி நிலைமையைக் காட்டி மொரார்ஜி அவர்கள் விதண்டாவாதம் பேசிக்கொண்டிருப்பதும், அந்த வாதத்தைத் தலைமேல் தூக்கிவைத்து இங்குள்ள காங்கிரசுக் கட்சியினர் வாதாடிக்கொண்டிருப்பதும் அவசியமற்றது மட்டுமல்ல—அருவருக்கக்கூடியதுமாகும்.

திட்டங்களின் நோக்கமே உள்நாட்டிலுள்ள இயற்கைச் செல்வங்களையும் — உழைப்பாற்றலையும் ஒருமுகப்படுத்துவதாகும். இந்த வகையில், இதுவரையில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்களில் பொதுவாகத் தென் மாநிலங்கள்—குறிப்பாகத் தமிழகம் பெற்றுள்ள பங்கு, நியாயமான பங்கு அல்ல—நீதிப்படி பங்கிடப்பட்டதல்ல!

"ஆறுகள் இருந்தாலல்லவா அணை கட்டமுடியும்?" என்று கழகத்தின் பிரச்சாரத்திற்குப் பதிலாகக் காங்கிரசார் சொல்லி வந்ததுண்டு.

இப்போது, 'இரும்புக் கனிப் பொருள் இருக்கிறது; அதைப் பயன்படுத்த இரும்பு ஆலையைக் கொடுங்கள்' என்று கேட்கையில், 'இரும்புக்கு இப்போது ஏது கிராக்கி?' என்று கேட்கின்றனர்!

சூலை 23 நெருங்க நெருங்க, 'தூத்துக்குடியில் எதற்குத் துறைமுகம்? அங்கிருப்பது கடலா?' என்றுகூடக் காங்கிரசார் கேட்கக்கூடும்!

தூத்துக்குடித் திட்டத்தைப் பற்றித் தீவிரமாக ஆராய்ச்சி செய்யப்பட்டுவந்த நேரத்தில், நினைத்தே பார்த்திராத 'கண்ட்லா', இன்று மிகப் பெரிய தொகையை விழுங்கி, துறைமுகமாகக் காட்சியளிக்கிறது!

ஆங்கிலேயன் காலத்திலேயே, 'சேலம் இரும்பு அற்புதமான கனி வகை' என்று பாராட்டப் பட்டது!

அப்போது ரூர்கேலா, பிலாய் என்பனவெல்லாம், ரெவி

(4 ம்பக்கம் பார்க்க)

# கட்சிகளுக்குள்ளே ஓர் ஒப்பந்த உணர்ச்சி தேவை

## பிரச்சினைகளை எளிதில் தீர்க்க வழிவகை காண்போம்

## எதிர்க்கட்சியினருக்கு அண்ணு வேண்டுகோள்

தமிழகச் சட்டமன்றத்தில், மாவட்ட நிர்வாகத் துறை மானியக் கோரிக்கை மீது 12—7—67 அன்று நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளிக்கும் வகையில் முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் ஆற்றிய உரை (முற்பகுதி நேற்று வெளியாகியுள்ளது) யின் பிற்பகுதி இங்கு தரப்படுகிறது:—

எங்களால் செய்ய முடியவில்லையென்ருல், அந்த அச்சம்தான் காரணமாக இருக்குமென்று நண்பர்கள் சொல்லுவார்கள். இந்த அச்சம், நிர்வாகத் துறையிலே திருத்தங்கள் செய்யும் பொழுது ஏற்படக்கூடாது. அப்படி ஏற்படக் கூடாதென்ருல், எல்லா அரசியல் கட்சிகளுக்குள்ளும் பெருந்தன்மையான அடிப்படையில் ஒப்பந்தம் ஏற்பட வேண்டும்; 'அரசியல் கட்சி விஷயங்களுக்கு இதைப் பயன்படுத்திக் கொள்ளமாட்டோம்; இதைச் செய்யுங்கள்' என்ற ஒப்பந்த உணர்ச்சியை ஏற்படுத்த வேண்டும். அது போன்று ஏற்படுத்திஞல்தான் இந்தக் காரியங்களைச் செய்ய முடியும்.

"அப்படி ஒப்பந்த உணர்ச்சியை ஏற்படுத்திஞல்தான் இதைச் செய்வார்களா? இல்லாவிட்டால் செய்யமாட்டார்களா?" என்று உறுப்பினர்கள் கேட்கக் கூடும்.

நான் திட்டவட்டமாகச் சொல்லுவேன் — ஒப்பந்தம் ஏற்படச் செய்தால் நல்லது. ஒப்பந்தம் ஏற்பட வழியிருக்கிறதா என்று பார்ப்பதற்கு நாங்கள் காத்துக் கொண்டிருப்பதற்குத் தயாராக இருக்கிரேம்.

"ஒப்பந்தம் ஏற்பட்டால் செய்வோம்; இல்லையென்ருல் செய்யவே மாட்டோம்" என்று சொல்லமாட்டேன். அதைச் செய்வதற்கு வேண்டிய முறைகளில் அரசு ஈடுபடும் என்று நான் வாக்களிக்க விரும்புகிறேன்.

### இதுபோன்ற நிலைமை இனி இருக்கக்கூடாது!

வட்டார வளர்ச்சிக் குழுவைப் பற்றிச் சொன்ஞர்கள். முன்ஞலே நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபொழுது, என்னுடைய செங்கற்பட்டு மாவட்ட வட்டார வளர்ச்சிக் குழுக் கூட்டத்திற்குப் போனேன்; ஐந்து ஆண்டுகளுக்கு அந்த ஒரு தடவைதான் போனேன். மாவட்டக் கலெக்டர் தலைவராக இருந்து நடத்திய முறையையும், வந்திருந்தவர்கள், 'கலெக்டருடைய பார்வை நம்மீது விழுமா விழுமா' என்று உட்கார்ந்த பாவனையையும் நான் பார்த்துவிட்டு, நாம் இந்த ஒரு தடவை வந்ததுகூடத் தேவையில்லை' என்று நினைத்தேன்; கலெக்டர்கூட என்னைப் பார்த்து, 'You can say something' என்ருர்; அந்த விதத்திலேதான் அது நடந்துகொண்டிருக்கிறது.

'You can say something' என்றவுடன், 'நான் ஒன்றும் சொல்வதற்கில்லை' என்று சொல்லி உட்கார்ந்து கொண்டிருந்தேன்.

### உடனடி உத்தரவு பிறப்பிக்க இயலாது

வட்டார வளர்ச்சிக் குழுவை உயிருள்ள அமைப்பாக மாற்றி அமைக்க வேண்டுமென்று உறுப்பினர்கள் சொன்ன கருத்தை வெகுவாக வரவேற்கிறேன். எந்த முறையில் அமைப்பது என்பதற்கான விவரங்களைச் சேகரிக்க விரும்புகிறேன்.

எந்தவிதமான புது இரத்த ஓட்டம் அதிலே இருக்கவேண்டுமென்பதைப் பற்றியும் யோசித்துப் பார்க்க இருக்கிறேன்.

அதற்கு, கலெக்டர் தலைமை வகிக்காமல் உத்தியோகப் பற்றற்றவர் தலைமைவகித்துவிட்டால் மட்டும் நிலைமை மாறிவிடாது.

கலெக்டர், அதிகாரிகள் எல்லாம், 'ஆளும் கட்சி' என்ற முறையில உட்கார்ந்து—வருகின்ற எல்லா உறுப்பினர்களும்—எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருப்பினும்—எதிர்த் தரப்பில் உட்கார்ந்து, ஆட்சிமன்றத்தைப் போலவே நடத்தலாம்; கேள்விகள் கேட்கலாம்; அதிகாரிகள் குழு தகவல்களைத் தரலாம்; யோசனைகளைச் சொல்லலாம்; பரிசீலிக்கலாம்:

ஆஞல், உடனுக்குடன் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்ற கருத்து மட்டும் ஏற்றுக்கொள்ளத்தக்க கருத்து அல்ல. எந்த உத்தரவையும் அரசினரைக் கேட்காமல் போட்டுவிட முடியாது.

'மதகு கட்டிவிடுங்கள்' என்று சொன்ஞல், 'கட்டுங்கள்' என்று உத்தரவு போட்டுவிட முடியாது. பணத்திற்கு வரும் போது, 'நிதி நிலையில் அதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறதா' என்பதை அறிந்து, பிறகுதான் உத்தரவு போட முடியும்.

### முதல் மாநாடு அது— கடைசி மாநாடும் அதுதான்!

சென்ற அரசிலே இருந்த முதலமைச்சர் அவர்கள், 'பாகல் மேடு' நடத்திப் பார்த்தார்கள். அவர்—பொதுமக்கள் தலைவர் என்ற முறையில்—யார் எதைக் கேட்டாலும் அந்த இடத்திலேயே செய்யச் சொல்லி உத்தரவு போட்டார்; 'உயர்நிலைப் பள்ளி வேண்டும்'—உத்தரவிட்டார்; 'பாலம் வேண்டும்'—'கட்டப்படும்' என்று சொல்லிவிட்டார். அதிகாரிகள் அதையெல்லாம் குறித்துவைத்துக் கொண்டு, 'இதற்கெல்லாம் நம்முடைய நிதி நிலைமை இடம் கொடுக்காது' என்று தெரிவித்தார்கள்.

அந்த வகையிலே பாகல்மேடு மாநாடுதான் முதல் மாநாடு—கடைசி மாநாடும் அதுதான்!

### 'பாதயாத்திரை செய்தனர்— பலனென்ன கண்டனர்?

அதற்குப் பிறகு காங்கிரசுக் கட்சியினர், 'நாங்கள் நேரடியாகவே குறைகளைக் கேட்டுக்கொண்டு வருகிரேம்' என்று சொல்லி, 'கால்நடைப் பயணம்' 'பாத யாத்திரை'... (திரு. கே. விநாயகம்—குறுக்கீடு) 'நம்முடைய கனம் விநாயகம் அவர்கள், சென்னையிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டதாலே போகவில்லை' என்று கூறுகிருர்; அவருடைய கட்சிக்குத் தெரியும்—'பாத யாத்திரைக்கு அவர் வர மாட்டார்' என்று அதஞல் விட்டுவிட்டார்கள் — சென்ருர்கள்; அதஞலும் பலன் ஒன்றும் இல்லை.

'பாத யாத்திரை' என்று போனவுடன் நிறைய மனுக்கள் தரப்பட்டனவே—அவற்றைப் பரிசீலித்துப் பார்க்கக்கூட அமைச்சர்களுக்கு முடிந்திருக்காது என்பதை நான் உணருகிறேன்.

### இடைவெளி எங்கே?

நான் காலையில் வீட்டிலிருந்து அலுவலகத்திற்கு வருவதற்குள் தரப்பட்டிருக்கும் மனுக்கள்—குவிகின்ற அளவைப் பார்க்கும் போது, அவைகளைப் படித்துப் பார்த்து, 'எங்கெந்த இலாகாவைச் சேர்ந்தவை' என்பதைக் கண்டறிவதற்கே நேரம் இல்லாத நிலை இருக்கிறது....

திரு. டி. எஸ். ஆதிமூலம்:—"மெடிகல் காலேஜ் மனுக்கள்...."

அண்ணு:—"மெடிகல் காலேஜ் விஷயத்தில் அதிகமான அளவுக்கு அணுகவில்லை; பொதுவாகப் பிரச்சினைகளுக்குத்தான் வருகிருர்கள். இன்னும் சொல்லப்போஞல், நியாயமான பிரச்சினைகளுக்காக வருகிருர்கள்; தேவையான பிரச்சினைகளுக்காக வருகிருர்கள்.

நியாயமான அந்தப் பிரச்சினைகளைப் படித்து—'அது செய்யப்படக் கூடியதுதாஞ' என்று கண்டறிந்து-அந்தந்த இலாகாகளுக்கு அனுப்பி—அனுப்பிய பிறகு, அதைச் செய்து முடித்தார்களா' என்று மறுபடியும் கேட்பற்கு இடைவெளி இல்லை! ஆகையிஞலேதான் நமது நண்பர்கள்—கருத்திருமன் என்று கருதுகிறேன்—'இதற்கென்று தனியாக ஒருவர் இருந்தால்கூட நல்லது' என்ருர்.

### தேவை இருக்கிறது!

அமைச்சர்களுக்கெல்லாம் துணையமைச்சர்கள் போடவேண்டுமென்ற யோசனை முன்பே சொல்லிக்கொண்டுவந்ததுதான்.

துணை அமைச்சர்கள் இருப்பார்களேயாஞல், இந்த மனுக்களையெல்லாம் அந்தந்த இலாகாக்களுக்கு அனுப்பி—தொடர்பு கொண்டு அதையெல்லாம் சரிப்படுத்துவதற்கு நல்லபடியாக இருக்கும்.

அதை இப்போது சொல்வதற்குக் காரணம் 'துணை அமைச்சர்கள் என்று சொல்லி ஏன் அமைச்சரவையின் எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொண்டீர்கள்?' எனக் கேட்கவேண்டாமென்பதற்காகத்தான்! 'அதற்குத் தேவை இருக்கிறது' என்பதை இதனுடைய தொடர்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### கிராம அதிகாரிகள் மனப்பான்மை

கிராம அதிகாரிகளைப்பற்றிப் பல கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டன. இரண்டு மாதத்திற்கு முன்ஞலே கிராம அதிகாரி ஒருவர் என்னிடத்திலே வந்து பேசிக்கொண்டிருந்தார். என்னிடத்தில் உள்ளது உள்ளபடியே — உள்ளத்திலே ஒரு துளியும் வஞ்சகம் இல்லாமல் பேசினர்; பாவனைக்காகப் பேசவில்லை.

அவர் சொன்ஞர்—"நாங்கள் ரூ. 5-10 என்று வாங்குவதைப் பற்றியெல்லாம், 'பெரிய இலஞ்சம்' என்று சட்டமன்றத்தில் பேசுகிருர்கள்; பொதுக்கூட்டத்தில் பேசுகிருர்கள்; இது எங்களுக்குச் சட்டப்படி -- சம்பிரதாயப்படி இருக்கிறஉரிமை; இதை ஏன் இலஞ்சம் என்று கருதுகிறீர்கள்?" என்று; 'என்ன ஐயா இது?' என்று அதிர்ச்சியடைந்து கேட்டேன்; 'இவ்வளவு குறைவான சம்பளத்தில் நாங்கள் வேலை பார்ப்பதிலே இருந்து—நெடுங் காலமாகவே நாங்கள் இம்மாதிரி கேட்பது, 'நியாயமானதுதான் என்று அரசினரே விட்டு வைத்திருக்கிருர்கள்' என்றுதான் பொருளே தவிர, இது. 'இலஞ்சம்' என்ற பட்டியலில் வராது; இதை வழக்குமன்றத்திற்குக்கூட வந்து சொல்லத் தயார்" என்று சொன்ஞர்.

உள்ளபடியே அவரை, 'நெஞ்சமுத்தக்காரர்' என்றுகூடச் சொல்ல முடியாது; 'சின்சீயரிடி' என்று தான் சொல்லவேண்டும்.

'அசைன்மெண்டுக்கு' ஒரு மனு எழுதிக் கொடுக்கிருர்; அதற்காக 2 ரூபாய் வாங்குகிருர்; அந்த மனுவை எழுதி வாங்கிக் கொண்டு போனவருக்கு நிலம் கிடைத்தால்—ஆயிரம் ரூபாய் பெறுமானம் உள்ள நிலம் வரப் போகிறது—'நான் எழுதிக் கொடுத்த மனுவுக்கு இரண்டு ரூபாய் கொடுத்தால் என்ன?' என்று அவர் அநியாய வாதம் பேசுகிருர்!

அது நியாயமா இல்லையா என்று தீர்ப்பளிப்பதற்காகச் சொல்லவில்லை; அந்த மனப்பான்மையில் கிராம அதிகாரிகள் இருக்கிருர்கள்.

### குறைபாடு நீங்க!..

அவர்களுக்குத் தரப்படுகின்ற ஊதியம் மிகக் குறைவானது. அந்த ஊதியத்தை ஒரு கிராம அதிகாரிக்கு 5 ரூபாய் அதிகப்படுத்துவதாக வைத்துக் கொண்டு இருக்கிற கிராமங்களைக் கணக்குப் பார்த்து—பெருக்கல் வாய்ப்பாடு போட்டுப் பார்த்தால், இப்போது இருக்கிற பட்ஜெட்டில், அதை எந்த இடத்திலும் சேர்க்கமுடியாது.

ஆகையிஞலேதான், 'ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு கிராம அதிகாரி இருக்கவேண்டும்' என்ற நிலையிலிருந்து மாறி—தாங்கக்கூடிய அளவுக்குச் சிறு சிறு அமைப்புக்களாக மாற்றி—அவ்வளவு அமைப்புக்களுக்கும் சேர்த்து கிராம அதிகாரிஇருப்பதாஞல்—அந்தஅளவுக்கு நல்ல ஊதியம் கொடுக்கத்தக்க அளவுக்கு அதிகாரிகளைப் போட்டுச் செய்வோமாஞல், உள்ளபடியே வேலைகள் ஒழுங்காக நடக்கும்; 'ஊதியம் குறைவாக இருக்கிறது' என்ற குறைபாடு இருக்காது; நிர்வாகம் திறமையாக இருக்கும்.

### மந்த நிலைமை மாற!

இப்போது இருக்கும் அமைப்பே புதிய உருவாக அமையவேண்டும். 'எல்லாக் கட்சிகளுக்கும் சம்பந்தப்பட்ட பிரச்சினை இது' என்ற மனப்பான்மை ஏற்பட வேண்டும். அதற்காக, விரைவிலே எல்லாக் கட்சித் தலைவர்களையும் கூப்பிட்டுக் கேட்டு—அவர்களுடைய கருத்தை அறிந்து — எந்த அளவுக்குச் செய்யலாம் என்று யோசிக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருக்கிறேன்.

அவைகள் எல்லாம் செய்யப்பட்டால் நிச்சயமாக கிராமப்புறங்களில் காணப்படுகிற மந்த நிலைமை பெருமளவுக்கு நீக்கப்படும்.

### உணர்ச்சியின் வடிவங்களாக மாவட்ட கலெட்டர்கள்

கலெக்டர்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். சில நாட்களுக்குமுன்ஞல், 'மாவட்டக் கலெக்டர் எல்லாம் வேலை செய்ய முடியாத அளவுக்கு வயது அதிகமானவர்களா? அல்லது, நல்ல வேலை செய்யக்கூடிய கட்டுடல் படைத்த இளைஞர்களா?' என்று பார்க்கவேண்டுமென்ற ஆவல் தோன்றியதால், இப்போதுள்ள கலெக்டர்களுடைய வயதைப் பற்றி விசாரித்தேன்.

ஒருவர் இருவரைத் தவிர, மற்றவர்கள் எல்லாம், 'எதையாவது செய்தே தீரவேண்டும்' என்ற ஆர்வத் துடிப்புள்ள வாலிப வயதினராகத்தான் நிரம்ப இருக்கிருர்கள்.

'வாலிப வயதினர்' என்ற காரணத்தால், 'அவர்களுக்கு அனுபவம் இருக்காது' என்று சொல்வதற்கில்லை!

அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளுகின்ற வயது வாலிப வயது; அனுபவத்தைப் பெற்றுப் பேசிக் கொண்டிருக்கக்கூடிய வயது அல்ல!

வயதானவர்களுக்கு, தாங்கள் பெற்ற அனுபவத்தைச் செயல்படுத்துவதற்கு உடலிலோ, உள்ளத்திலோ அதிகமான அளவுக்குத் தெம்பு இருக்கமுடியாது!

அந்த அனுபவத்தைப் பெற்றுக் கொண்டு வருகிற பருவத்திலேயேயுள்ள—40, 45, 50 வயதுக்குள் இருக்கின்றவர்கள் மாவட்டக் கலெக்டராக இருக்கின்ற இடங்களைப் பார்த்தால் அங்கு சுறுசுறுப்பாக வேலை நடப்பதை உணர முடியும்.

முன்பெல்லாம், கலெக்டர்களைப் பார்ப்பதே கஷ்டம்; அதற்காகத்தான், 'ஜமாபந்தி' என்று வைத்திருந்தார்கள்,

இப்போது மாவட்டக்கலெக்டர்கள் பலரை மாலை நேரத்தில் பார்த்தால், 'கலெக்டர்' என்றே தோன்ருது; பில்லை போட்ட சேவகன், 'வழி விடு' கலெக்டர் வருகிருர்' என்று சொன்ஞல்தான் 'கலெக்டர் வருகிருர்' என்று தெரியும்.

கல்லூரி மாணவர் அல்லது ஆசிரியரைப்போல் எளிய தோற்றத்தோடும், வாலிப முறுக்கோடும் பல கலெக்டர்கள் அமைந்திருக்கிருர்கள்.

இப்போதுள்ள கலெக்டர்கள், சமுதாயத்தின் புதிய வளர்ச்சியின் வடிவங்களாக இருக்கிருர்கள். வெள்ளைக்கார அதிகாரிகள் மறுபிறவிகள் அல்லர்!

"நாம் இருந்த நேரத்தில் என்ன செய்தோம்? நம்முடைய நிர்வாகத்தில் இருந்த மாவட்டம் எந்த அளவுக்குச் சீரடைந்தது?" என் பதிலே திருப்திப்படுகிறவர்கள் மாவட்டக் கலெக்டர்களாகப் பணியாற்றிவருகிருர்கள். அவர்களுக்குச் சட்டமன்ற உறுப்பினர்கள் மேலும் ஊக்கத்தைத் தரவேண்டும் — உற்சாகத்தையும் தரவேண்டும்.

இந்த ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தருவதற்குச் செய்ய வேண்டிய முதல் பணி, அதிகமான அளவுக்கு அவர்களிடத்தில் தனிப்பட்ட மனுக்களைக் கொண்டுபோகாமல் இருக்க வேண்டும் என்பதுதான்.

அதே நேரத்தில் பொதுப் பிரச்சினையை எந்த அளவிற்குக் கொண்டுசெல்ல முடியுமோ, அந்த அளவிற்குக் கொண்டு செல்ல வேண்டும்—விவாதிக்க வேண்டும்.

### பலனுள்ள காரியமாற்ற....!

"வட்டார வளர்ச்சிக் குழுக் கூட்டம் இரண்டு நாட்கள் தேவை" என்று கூறப்பட்டது; 'இரண்டு நாள் போதுமானது' என்று கூடச் சொல்ல முடியாது; அவ்வளவு பிரச்சினைகள் வருகின்றன. அவ்வளவையும் நடத்தி, வட்டார வளர்ச்சிக் குழுவை இன்னும் கொஞ்சம் உயிரோட்டமுள்ளதாக்கி—பல பிரச்சினைகளை அன்று பேசித் தீர்க்கப்பட வேண்டிய நிலையை ஏற்படுத்திஞல், மாவட்டக் கலெக்டர்கள், இப்போதுள்ளதைவிட இன்னும் அதிகப் பலன் உள்ள காரியங்களைச் செய்வார்கள் என்று கருதுகிறேன்.

### அதிகாரிகள் கடமை— ஏழை எளியவர்களை மதிப்பது அவசியம்!

"எந்த அரசுக்கும் கெட்ட பெயர் வருவது, கீழ் மட்டத்திலுள்ள சில்லறை அதிகாரிகளால் தான்" என்று கூறப்பட்டது; அதற்குக் காரணம், அவர்கள் கீழ் மட்டத்தில் இருப்பதால் தான். அவர்கள் நிலைமை உயர உயர அவர்களுக்கு, தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தித்தான், மனத்துக்கு ஒரு திருப்தி; அதையெல்லாம் நீக்கிக் கொள்ள வேண்டுமென்று நாம் எல்லாம்—அரசியல் கட்சிகள் சார்பில் அல்ல—நாட்டு மக்கள் சார்பில் கேட்டுக்கொள்கிரேம்.

ஏனெனில், கீழ்மட்ட அதிகாரிகளிலிருந்து மாவட்டக்கலெக்டர்கள் வரையில்-அதிகாரிகள் யாராக இருந்தாலும், அவர்கள், அதிகாரத்தை நடத்துவதற்கு ஒரு இயந்திரத்தை அமைத்துக் கொடுத்திருக்கிறவர்கள்; அந்த இயந்திரம் நடப்பதற்கான வசதியைத் தேடிக் கொடுக்கின்றவர்கள், கிராமங்களிலுள்ள—இரத்தத்தையும் வியர்வையையும் கீழே சொட்டுகிற ஏழை எளியவர்களே தவிர வேறு யாரும் இல்லை!

(4-ம் பக்கம் பார்க்க)

# 'தமிழ்நாடு' பெயர் மாற்றத் தீர்மானம்

## 'தமிழ் மரபை உலகறியச் செய்யும்'-- முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, சூலை 19—

"இந்திய அரசியலமைப்பில் இந்த மாநிலத்தின் பெயரை 'தமிழ்நாடு' என்று மாற்றவேண்டும் என இந்த அவை கருதுகிறது ; மேலும், இது குறித்து இந்திய அரசியலமைப்பில் தேவையான திருத்தங்களை நிறைவேற்ற இந்த மாநிலம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமெனறும் பரிந்துரைக்கின்றது"

என்ற தீர்மானத்தை, சட்டமன்ற மேலவையில், முதலமைச்சர் அண்ணா அவர்கள் கொண்டுவந்தார் ; 'இந்தத் தீர்மானம், எளிய—உணர்ச்சிமயமான—ஆதாரங்கள் நிறைந்த தீர்மானமாக இருப்பதால், முன்னுரை தேவையில்லை' என்றார்.

தீர்மானத்தை வரவேற்று எதிர்க் கட்சித் தலைவர் பேசியதற்குப் பின் அண்ணா அவர்கள் விளக்கியதாவது :—

"அரசியல் சட்டத்திற்கு திருத்தம் கொண்டுவரக் கோரும் இந்தத் தீர்மானத்தை, 'அரசுத் தரப்பில் கொண்டுவந்தது' என்று கருதாமல், இந்த அவை முழுவதுமாகச் சேர்ந்து கொண்டு வந்த தீர்மானமாகக் கருத வேண்டும்.

'நாட்டு மக்கள் அனைவருக்கும் ஏற்புடைய ஒன்று' என்பதை, எதிர்க் கட்சி ஆதரித்துப் பேசியதே இதற்குச் சான்றாகும்.

ஆனால், வெங்கட்ராமன் கூறிய சில வாதங்களை மற்றவர்கள் வேறுவிதமாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்பதற்காகப் பதில் கூற வேண்டியிருக்கிறது.

நிர்வாகத்திற்கும் தொழில் வளத்திற்கும் 'சென்னை' உலகில் பெயர் பெற்றது என்பதைவிட, 'தமிழ் நாடு என்பதையும் உலகு தெரிந்துகொள்ள வேண்டும்.

சேர—சோழ — பாண்டியரையும், சிலப்பதிகாரத்தையும், குறளையும், சீவக சிந்தாமணியையும், அகநானூறு, புறநானூறு, மற்றவற்றையும் உலகம் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஈராயிரம் ஆண்டுகள் எழிலோடு இருந்த தமிழ் மரபை உலகு தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது.

'சென்னை ராஜ்யம்' என்றால்தான், 'சிறந்த நிர்வாகம்' என்று வெளிநாட்டினருக்குத் தெரியவரும் என்று எதிர்க் கட்சித் தலைவர் கூறினர் ; நிர்வாகச் சிறப்பு மட்டுமல்ல — கிளைவ், வாரன் ஹேஸ்டிங்ஸ் கூட நினைவுக்கு வரலாம் ; செயிண்ட் ஜார்ஜ் கோட்டையும் நினைவுக்கு வரலாம்......

வெங்கட்ராமன் :— "அவற்றையெல்லாம் மறந்துவிட்டார்கள்."

முதலமைச்சர் :—"அத்துடன், நிர்வாகத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த சேர—சோழ—பாண்டிய மன்னர்களையும், தமிழ் மரபையும் மறந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் இந்தத் தீர்மானம்.

இந்தத் தீர்மானத்திற்கு எதிர்க் கட்சியினர் ஒப்புதலைத் தந்தமைக்கு நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழின்—தமிழ்நாட்டு மக்களின் உணர்ச்சி வடிவாக இந்தக் கோரிக்கை இருக்கிறது. இதை நிறைவேற்றி வைப்பார்கள் என்று நம்புகிறேன்.

தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

## குன்னத்தூர் க. அன்பரசு

### சுற்றுப்பயணம்

சூலை 21 : வெ. திருப்பூர் ; 23 : வனவாசி ; 24 : மேச்சேரி ; 25 : சிறுமுகைபுதூர் ; 26 : சோமனூர் ; 28 : காசிபாளையம் ; ஆக. 6 : அருப்புக்கோட்டை.

சென்னை—வண்ணை

## கே.எஸ். அருணாசலம்

### மறைவு

சென்னை, சூலை 20—

தியாகச் செம்மல் வண்ணை கே. எஸ். பாண்டியனின் இளவலும் சென்னை 10-வது வட்ட தி.மு.க. கிளையின் செயலாளரும், தி.மு.க. துவக்க நாள் முதல் வட சென்னையின் கழகம் வேரூன்றித் தழைக்க அரும் பாடுபட்டவர்களில் ஒருவருமான தோழர் கே. எஸ். அருணாசலம் அவர்கள் நேற்று மாலை மருத்துவ மனையில் உயிர்நீத்தார் என்ற செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தாருக்கும், இயக்கத் தோழர்கட்கும் நமது இரங்கலும் ஆறுதலும் உரித்தாகுக. (ஆ—ர்.)

# கோயிலில் திருமணப் பதிவு

## அமைச்சர் விளக்கம்

சென்னை, சூலை 17—

"கோயில் நிர்வாக அலுவலர்கள் திருமணப் பதிவாளர்களாக நியமிக்கப்பட்டிருப்பது உண்மைதான் ; ஏற்கனவே கோயில்களில் நடைபெறும் திருமணங்களுக்கு இரசீது கொடுக்கப்பட்டுவந்த போதிலும், 1955-ம் ஆண்டைய திருமணச் சட்டத்தின்கீழ் அதற்கான விதி இல்லை; இப்போது புதிய உத்தரவு மூலம் அது உறுதிப் படுத்தப்பட்டு, இரசீதுடன் பதிவு செய்யப்படுகிறது"

என்று சட்டத்துறை அமைச்சர் செ. மாதவன், சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

# தலைநகரில் பாகிஸ்தான் ஒற்றர்

## வெளியேற டில்லி உத்தரவு

புதுடில்லி, சூலை 19—

புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் தூதுவரகத்தைச் சேர்ந்த சாபிர் அலிஷா என்பவரை 48 மணி நேரத்திற்குள் இந்தியாவிலிருந்து வெளியேறிவிடுமாறு இந்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

சாபிர் அலிஷா வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாக இந்திய அரசு குற்றஞ்சாட்டியுள்ளது.

# கட்சிகளுக்குள்ளே ஓர் ஒப்பந்த....

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவே, அவர்களுக்குரிய மரியாதையைக் கொடுப்பதற்கு எல்லா அதிகாரிகளும் முனைந்து நிற்க வேண்டுமென்று நானும்—உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டது போலவே—கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

## அந்த நிலையெல்லாம் இன்று இல்லை!

நல்லதொரு மாறுதல் இன்றையத் தினம் பல இடங்களில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. அதை உறுப்பினர்களும்கூட அறிந்திருக்கின்றார்கள். அப்படி அறிந்திருப்பதால்தான் எல்லோரும் சொன்னார்கள்—'இந்த 'ஜமாபந்தி'யே வேண்டாம்' என்று!

20 ஆண்டுகட்கு முன்பு வரையில், ஜமாபந்திஎன்றால்தான் அதிகாரிகளைப் பார்க்கமுடியும்' என்ற நிலைமை இருந்தது; இப்போது ஒவ்வொரு நாளும் அதிகாரிகளை, நாமாவது போய்ப் பார்க்கிறோம் ; அல்லது, அவர்களாக நம்மை வந்து பார்க்கிறார்கள்.

'ஜமாபந்தி' என்ற முறையை வைத்துக்கொண்டுதான் அதிகாரிகளை காணமுடியும்—என்ற நிலை மாற வேண்டுமென்று சொன்னார்கள்.

நான் சிறுவனாக இருந்தபோது ஜமாபந்தி பற்றிச் சொலவார்கள்—கிராமத்தில் ; 'அடுத்த மாதம் ஜமாபந்தி வரப்போகிறது—இந்த ஆடு அதற்குத்தான் ; 'அடுத்த மாதம் ஜமாபந்தி வரப்போகிறது—இந்த ஆறு கோழிகளும் அதற்காகத்தான் வாங்கி வைத்திருக்கிறேன்' என்று! அந்த நினைப்பில்தான் உறுப்பினர்கள் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன். இப்போது அந்த நிலைமை மாறிவிட்டிருக்கிறது! முன்னால் அதிகாரிகள் வருகிறார்கள் என்றால், ஆடுகூட நடந்து போகும்—'என்னை எடுத்துக்கொள்ளுங்கள்' என்று!

திரு. கருத்திருமன் அவர்கள் சொன்னதுபோல் மக்கள் அவ்வளவு தெளிவற்றவர்கள் அல்லர்!

"ஜமாபந்திக்கு கலெக்டர் வந்திருக்கிறார் ; நீங்கள் வருகிறீர்களா ?" என்று கருத்திருமனைக் கேட்டால், அவர், 'எனக்கொன்றும் அவரைப் போய்ப் பார்க்க வேண்டிய அவசியமில்லை' என்றுதான் சொல்வார் ; ஆனால் அவருடைய தந்தை யாரிடம் அப்படிச் சொல்லியிருந்தால், ஊர் முழுவதிலும் அவர், 'கலெக்டர் என்னைக் கூப்பிட்டார்—கலெக்டர் என்னைக் கூப்பிட்டார் என்று சொல்லிப் பெருமையாகப் பேசிக்கொண்டிருந்திருப்பார்.

ஆனால், பழைய தலைமுறை மறைந்து இப்போது ஒரு புதிய தலைமுறை வருகிறது ; ஆகவே, அந்தத் தலைமுறைக்கேற்ற வகையில் அதிகாரிகளும் நடந்துகொள்கிறார்கள்

மேலும் அவர்களுக்கு உற்சாகத்தை அளித்தால், அவர்கள் இன்னும் நன்றாக நடந்துகொள்வார்கள் ; அதை அளிக்க இருக்கிற உடனடியான ஒரு வழி, இந்த மானியத்திற்குக் கொடுத்திருக்கின்ற 'வெட்டு'க்களை எல்லாம் திரும்பப் பெற்றுக் கொண்டு உற்சாகப்படுத்துவீர்களானால், அந்த நிர்வாகம் நல்ல முறையில் இயங்கும் என்று சொல்லி இந்த மானியத்தை நிறைவேற்றிக் கொடுக்கும்படி அவையினரைக் கேட்டுக்கொள்கிறேன்."

## நடக்க இருப்பவை

### பொதுக்கூட்டங்கள்

### 21--7--67

**செங்கம்**

தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு சிவன் கோயில் எதிரில்; தலைவர்: அப்துல் காதர்; பேசுவோர்: அறிஞர் அண்ணா, பி.எஸ். சந்தானம் எம்.எல்.ஏ., சி.கே. சின்னராசு எம்.எல்.ஏ., ஆர். முத்து எம்.பி., ப.உ. சண்முகம், இரா. தர்மலிங்கம், எஸ். முருகையன் எம்.எல்.ஏ., கே.வி. குப்புசாமி, செ. அரங்கநாதன், அ.ந. அரங்கநாதன், எம்.எஸ். இராதாகிருட்டினன்.

**அந்தியூர்**

தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு தேரடித் திடலில்; தலைவர்: ஏ.என். சுப்பிரமணியம்; பேசுவோர்: ஜே. மாதா (கவுடர்), ஜி. பி. வெங்கிடு, ஏ. ஆர். கோவிந்தசாமி, அ. வெற்றிவேல்.

**மதுரை 11-வது வட்டம்**

பகுத்தறிவுப் பாசறைச் சார்பில் இரவு 7 மணிக்கு சுப்பிரமணியபுரம் அண்ணா திடலில்; தலைவர்: ப. கந்தன்; பேசுவோர்: எஸ். நெல்லைமாறன், சி. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., கு. திருப்பதி பி.ஏ.,பி.எல்., எஸ்.டி. நடராசன், பி.கே. சேரமான். செ. இளமாறன்.

### 22--7--67

**குப்பக்கோணம்புதூர்**

தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு; பேசுவோர்: செ. மாதா கௌடர், கேரள சுந்தரம், க. மருதாசலம், இரா. மாணிக்கவாசகம் எம்.எல்.ஏ., கு. திரவியம், மற்றும் பலர்.

**கல்லக்குடி**

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு அண்ணா படிப்பகத் திடலில்; தலைவர்: சு. பிச்சை; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., ஆ. துரைராசு எம்.பி., மு.க.து. நடராசன் எம்.எல்.ஏ., அப்துல் வகாப் எம்.எல்.சி., அ. தம்புசாமி, கே. கந்தசாமி, எஸ். நடேசன்.

**கோவை 8-வது வட்டம்**

பொற்செழியன் நினைவு மன்றச் சார்பில்; மாலை 6 மணிக்கு காந்திபுரம் 7-ம் வீதி அருகில் தலைவர்: பி. நாராயணசாமி; பேசுவோர்: வெ. கண்ணன், பா. கோபால், சே.அ. இராசமாணிக்கம், கேரள சுந்தரம், மற்றும் பலர்.

**சிவகாசி**

எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு மாரியம்மன் கோவில் திடலில்; தலைவர்: மா. குருவையா; பேசுவோர்: ஆர். கே. துரைநாரணன், கே.வி.கே. இராசன், ச. ஆறுமுகம். (குமாரி விசயாவின் 'ஆளுகின்றார் அண்ணா' கலை நிகழ்ச்சி நடைபெறும்.)


ரோஜா பாக்கு & புகையிலை

N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்


## பள்ளி ஆண்டு விழா

### கருணாநிதி கலந்துகொள்வார்

சென்னை--முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளி இலக்கியமன்ற 59-ஆம் ஆண்டுத் துவக்கவிழா; பள்ளிப் பொது அரங்கில் 21—7—67 மாலை 4 மணிபளவில் நடைபெறும்; பொதுப் பணித் துறையமைச்சர் மு. கருணாநிதி சிறப்புரையாற்றுவார்.

## கலை நிகழ்ச்சி

ஆலந்தூர் மாதவரம் காலனியில் 21—7—67 இரவு 7 மணிக்கு சிவகங்கை சேதுராசனின் பல குரல் கலை நிகழ்ச்சி எஸ்.எஸ். மணி தலைமையில் — இர. கோதண்டராமன் முன்னிலையில் நடைபெறும்.

# சுயமரியாதைத் திருமண மசோதா

## பொறுக்குக் குழுவுக்கு விட மேலவை ஒப்புதல்

சென்னை, சூலை 19 |

"16 சட்டமன்த உறுப்பினர்கள், 8 மேலவை உறுப்பினர்கள் கொண்ட கூட்டுப் பொறுக்குக் குழுவுக்கு சுயமரியாதைத் திருமண (திருத்த) மசோதாவை அனுப்ப வேண்டும்" என்று சட்ட அமைச்சர் செ.மாதவன் கொண்டு வந்த பிரேரணையை, சட்டமன்ற மேலவை ஏற்றுக்கொண்டது.

# இரும்பும் ஈயும்!

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

**வியூ அதிகாரிகளின் வரித் திர்வைப் பட்டியலில் மட்டுமே காணப்பட்ட சிறு ஊர்களாக இருந்தன !**

**காங்கிரசு ஆட்சியில் ஏழை ஏழையாகவும், பணக்காரன் பணக்காரன் ஆகவும் ஆன அவல நிலையைப்போல், குறிப்பிட்ட திட்டங்களே பூதாகாரமாக விஸ்தரிக்கப்பட்டு, தேவையான சில திட்டங்கள் மக்களின் எண்ணங்களில் இருந்தே மறைந்துவிடுமாறு செய்யப்பட்டன !**

தங்கள் கைவசம் இருக்கும் கோட்டா, பெர்மிட்டுகளுக்கு ஏற்றாற்போல் மட்டும் இரும்பு கிடைத்தால் இலாபகரமானது என்று காங்கிரசுக்காரர்கள் நினைக்கலாம் ; அதிகப்படியாக உற்பத்தியாகும் இரும்புக்கு, 'கிராக்கி இல்லை' என்று அவர்கள் கிறுக்குத்தனமாகப் பேசலாம் !

உற்பத்தியாவதற்கே நெடுநாட்கள் எடுத்துக்கொள்ளும் இரும்பு ஆலை போன்றவற்றிற்கு, இப்போதுள்ள 'கிராக்கி' அடிப்படையில் சிந்திப்பது புத்திசாலித்தனமல்ல !

இன்றைக்குத் தொடங்கி நாளைக்கே இரும்பைச் சந்தையில் கொண்டுவந்து குவித்துவிடப்போவதில்லை !

காங்கிரசுவாதிகளுக்குப் பரந்த சனநாயக நோக்கு இல்லை என்பதைப்போலவே, அவர்களால் அரசியலில் நெடுங்காலக் கண்ணோட்டத்தைச் செலுத்தவும் முடியாது !

"இரும்பு அடிக்கும் இடத்தில் ஈக்கு என்ன வேலை" என்று கேட்பது தமிழர்ப் பழமொழி.

துவக்கத்தில் குறிப்பிட்டபடி தலையங்கம் எழுதியவரை, 'ஈ' என்று நாம் சொல்லவில்லை ! ஆனால், இரும்பாலை சம்பந்தப்பட்ட எழுச்சி நாளில் அவருக்கு வேலை இல்லை !

ஏனென்றால், அன்று அவர் செய்ய வேண்டியதெல்லாம், 'நன்றாகத் தூங்குவதே' ஆகும் !

—தோழன்

## சேலம் -- தூத்துக்குடி எழுச்சி நாள்

# பொதுக்கூட்டம்

**23-7-67 மாலை 7-மணிக்கு -- சென்னை மெரினா கடற்கரையில்**

தலைவர் : நிலநாராயணன்

பேசுவோர் :

அமைச்சர் **மு. கருணாநிதி**

அனந்தன் நம்பியார் (இடது. பொதுவு)

எம். ஆர். வெங்கட்ராமன் (இடது பொதுவு)

கு. மா. பாலசுப்பிரமணியம் (தமிழரசுக் கழகம்)

ஏ. கே. ஏ. அப்துஸ் சமது (முஸ்லிம் லீக்)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] நாயக்கன் செட்டித் தெரு. [illegible]